


கழக பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் துணைவியாரும் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்தில் கழகத் துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., அவர்கள் நேரில் சென்று அம்மையாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினார்.

### அஞ்சல்துறையின் நவீன மயமாக்கல் மற்றும்

# டிஜிட்டல் மயமாக்கல் வெறும் கண்துடைப்பு!

## ஒன்றிய அமைச்சரின் பதிலுக்கு - கே.இ.பிரகாஷ் எம்.பி. அதிருப்தி!



புதுடெல்லி, ஆக.22-

அஞ்சல் துறையின் நவீனமயமாக்கல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் நடவடிக்கைகள் வெறும் கண்துடைப்பு என ஒன்றிய அமைச்சர் அளித்த பதில்களுக்கு கே.இ.பிரகாஷ் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து கே.இ.பிரகாஷ் எம்.பி. கூறியிருப்பதாவது:-

ஒன்றிய அரசின் அஞ்சல் துறை நவீனமாக்கல் மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் எந்த அளவுக்கு இந்தியாவின் கிராமப்புற மக்களுக்கு பயனளித்துள்ளது என்பது குறித்து, இன்று நாடாளுமன்றத்தில் தொலைத்தொடர்பு துறை அமைச்சகத்திடம் கேள்வி எழுப்பினேன். ஏற்கனவே, இந்த அரசு கிராமப்பு றங்களுக்கு வங்கிச்சேவைகளை போதுமான அளவுக்கு எடுத்துச் செல்லவில்லை என்பது, நான் எழுப்பிய 2381 கேள்வி எண் மூலம் தெளிவாகியிருந்தது. இந்த நிலையில், தொலைத்தொடர்பு துறை குறித்த கேள்விகளை எழுப்பினேன்.

ஆனால், வழக்கம் போல தன்னுடைய தொழில்நுட்ப அலங்கார வார்த்தைகளால் நிரம்பிய பதில்களை அளித்து ஒன்றிய அரசு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

**புதிய மென்பொருள் அறிமுகம்; ஆனால், பணியாளர்களுக்கு பயிற்சியில்லை!** தொலைத்தொடர்பு மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இணை அமைச்சர் டாக்டர்.பெம்மசானி சந்திரசேகர் அளித்த பதிலில், DOP IT 2.0 என்ற திட்டம் 35,785 கோடி செலவில் தொடங்கப்பட்டிருப்பதாக சொல்லியிருக்கிறார். இதன் மூலம், அஞ்சல் மற்றும் நிதிச் சேவைகளை ஒருங்கிணைக்கப் போவதாக குறிப்பிடு கிறார். இதற்காக, 'Advanced Postal Technology (APT)' என்ற புதிய உள்நாட்டு மென்பொருளை 1.64 லட்சம் தபால் நிலையங்களில் பயன்படுத்தப் போவதாக சொல்கிறார்.

ஆனால், எதற்காக இந்த மென்பொருள் உருவாக்கப்பட்டது, இது எவ்வளவு சிறப்பாகச் செயல்படும் என்பதற்கான தகவல்கள் இல்லை. நாடு முழுவதும் பழைய மென்பொருளை நீக்கிவிட்டு, புதிய மென்பொருளை நிறுவுவதும் அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அதற்கான தொழில்நுட்ப பயிற்சி பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதா, அதில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகளை சரிசெய்ய திட்டங்கள் உள்ளதா என்பது குறித்த விவரங்கள் இல்லை.

அஞ்சல் அலுவலகங்களில், QR code பணப் பரிமாற்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் சொல்கிறார். இந்தியாவில் இதை எத்தனை கிராமப்புற மக்கள் உண்மையில் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பற்றிய தகவல் இல்லை. QR Code பணப்பரிமாற்ற முறைக்கு விரைவில் கட்டணம் விதிக்கப்போவதாக செய்திகள் வரும் நிலையில், அதை தொலைத்தொடர்பு துறை எப்படி கையாளப்போகிறது என்பதற்கு விளக்கம் இல்லை. இந்த இரண்டுக்கும் பதில் இல்லாத வரை, இது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையே.

**ஆண்ட்ராய்ட் ஃபோன்கள் அளித்தால் மட்டும் போதுமா?**

கிராமப்புற கிளை அஞ்சல் அலுவலகங்களுக்கு ஆண்ட்ராய்ட் மொபைல் ஃபோன்கள் வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் சொல்கிறார். இந்த மொபைல்களில், அஞ்சல் துறையே உருவாக்கிய IMA (Internal Mobile App) செயலி மூலம், Digital signatures மற்றும் Instant delivery status updates போன்ற பல வசதிகள் வழங்கப்படுவதாகச் சொல்கிறார்.

ஆனால், இந்தக் கருவிகளைப் பயன்படுத்தும் பணியாளர்களுக்கு போதுமான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்த முக்கியத் தகவல் இல்லை ஆய்வுகளின் படி, இந்தியாவின் கிராமப்புறங்கள் உள்ளிட்ட பல இடங்களில் இணையத் தொடர்பு தொடர்பான தொழில்நுட்பக் குறைபாடுகள் இருப்பது தெரிய வந்துள்ளது. உட்புறம் இந்த குறைகளை சரிசெய்யாமல், வெளிப்புறம் மொபைல் ஃபோன்களை அளிப்பதால் மட்டும் என்ன பயன்? இதற்கு ஒன்றிய அரசிடம் பதில் இல்லை.

**புதிய புதிய பெயர்களில் திட்டங்கள்; ஆனால், புகார்கள் குறையவில்லை**

அஞ்சல்துறையில் Core Banking Solution (CBS) கீழ் ATM facilities, Internet Banking, Mobile Banking போன்ற வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் சொல்கிறார். ஆனால், இந்தச் சேவைகள் அனைத்தும் நகரங்களில் உள்ள மக்களுக்கு மட்டுமே பெரும்பாலும் பயன்படுகின்றன என்பது தெளிவு. இந்நிலையில், கிராமப்புறங்களில் உள்ள ஏழை, நடுத்தர மக்கள் இதை எந்த அளவுக்குப் பயன்படுத்துகிறார்கள், அப்படி பயன்படுத்தினால் அது குறித்த தரவுகள் எங்கே போன்ற கேள்விகளுக்கு விடையில்லை.

India Post Payments Bank (IPPB) சேவைகள் நாடு முழுவதும் 1.64 லட்சம் இடங்களில் கிடைப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்த இடங்களில் எல்லாம் Virtual

Debit Card, Post Office Savings Account linkage with IPPB accounts, online payment for Post Office Saving schemes, Aadhaar Enabled Payment System (AePS) உள்ளிட்ட பல திட்டங்கள் செயல்பாட்டில் இருப்பதாக அமைச்சர் தெரிவிக்கிறார். ஆனால், இதிலும் எத்தனை கிராமப்புறங்கள் பயன்பெறுகின்றன, அங்கெல்லாம் இது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

மேலும், ஒன்றிய அரசு பெருமையாக குறிப்பிடும் ஆதார் மூலம் பணம் செலுத்தும் முறையான AePS போன்ற சேவைகளில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகள் மற்றும் பணப் பரிவர்த்தனை தோல்விகள் ஆகியவற்றை ஒன்றிய அரசு கணக்கில் எடுத்துள்ளதா என்றும் தகவல் இல்லை. எந்த சூழ்நிலையிலும் வாடிக்கையாளர்கள் தங்கள் பணத்தை இழக்காத வகையில், இதை மேம்படுத்த அவர்களிடம் என்ன செயல்திட்டம் உள்ளது என்பதும் தெரியவில்லை.

Mail and Parcel Optimization Project (MPOP) என்ற திட்டம் பார்சல் சேவைகளை நவீனப்படுத்தியதாகச் சொல்கிறார்கள். ஆனால், பார்சல்கள் சேதமடைவது, குறிப்பிட்ட நேரத்திற்குள் ஒப்படைக்கப்படாதது போன்ற புகார்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அனைத்து பார்சல்களும் கண்காணிக்கப்படும் அஞ்சல்களாக (accountable articles) மாற்றப்பட்டதாக ஒன்றிய அரசு சொன்னாலும், அந்த கண்காணிப்பு முறை எவ்வளவு துல்லியமாக செயல்படுகிறது? இந்தத் திட்டம் நடைமுறையில் என்ன முன்னேற்றத்தைக் கொண்டு வந்துள்ளது?

ஒட்டுமொத்தமாக பார்க்கையில், அஞ்சல் துறையின் நவீன மயமாக்கல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் நடவடிக்கைகள் வெறும் பெயரளவிலான திட்டங்களாக இல்லாமல், கிராமப்புற மக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களின் தேவை களை உண்மையாக பூர்த்தி செய்யும் வகையில் இருக்க வேண்டும். அதற்கு, திட்டங்களை அறிவிப்பதோடு மட்டுமல்லாமல், சரியான கட்டமைப்பு வசதிகளையும், திட்டங்க ளின் செயல்பாட்டை கண்காணித்து மேம்படுத்தும் அமைப்பும் ஒன்றிய அரசு ஏற்படுத்த வேண்டும்.

அஞ்சல் துறை தான் கிராமப்புற மக்கள் பயன்படுத்தும் எல்லைக்குள் இருக்கும் முக்கியமான தொலைத்தொடர்பு மற்றும் வங்கி சேவை. அதில் ஒன்றிய அரசின் நிர்வாகப் பிழைகளுக்கு இடமிருக்கக்கூடாது.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

### கடன் சார்ந்த திட்டங்களின் கீழ்

# தமிழ்நாட்டில் வழங்கப்பட்ட கடன்கள் எவ்வளவு?

## மக்களவையில் கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக.22

ஒன்றிய அரசின் பல்வேறு கடன் சார்ந்த திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்ட கடன்கள் எவ்வளவு என்று திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி. என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:-

(அ) தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஜன் சமர்த் போர்ட்டலை அரசு செயல்படுத்தியுள்ளதா?

(ஆ) அப்படியானால், இந்த இணையதளம் தொடங்கப்பட்டதிலிருந்து தமிழ்நாட்டிலிருந்து அதன் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை;

(இ) பல்வேறு கடன் சார்ந்த திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டில் பயனாளிகளுக்கு அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை;

(ஈ) தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு திட்டத்தின் கீழும் வழங்கப்பட்ட தொடர்புடைய தொகை;

(உ) தமிழ்நாடு பயனாளிகள் போர்டல் மூலம் அணுகும் திட்டங்களின் வகை வாரியான (விவசாயம், கல்வி, வணிகம், முதலியன) விவரங்கள்; மற்றும்



(ஊ) மாநிலத்தில் உள்ள கிராமப்புற மற்றும் பின்தங்கிய மக்களிடையே டிஜிட்டல் விழிப்புணர்வையும் போர்ட்டலை அணுகுவதையும் மேம்படுத்த அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய நிதி அமைச்சக இணை அமைச்சர் பதிலளித்துள்ளார்.



கும்முடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, பூண்டி ஒன்றியத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் பொது மக்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி, அவர்களின் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க அதிகாரிகளை கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

# பிறப்பால் தமிழராக இருக்கலாம்; ஆனால் உணர்வால் நிச்சயம் இல்லை!

இந்தியக் குடியரசு துணைத் தலைவருக்கான தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளராக தமிழ்நாட்டைச் சேர்ந்த சி. பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் அறிவிக்கப்பட்டு இருக்கிறார்.

பாஜக ஆட்சியில் இருந்த 1998 2004 ல் ஆறாண்டுகள் கோவை நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராக இருந்தவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள். இந்த காலகட்டத்தில் தமிழ்நாட்டிற்கு அவர் என்ன செய்தார் என்றால், ஒன்றும் செய்யவில்லை என்பது தான் உண்மை. கச்சத்தீவு, முல்லைப் பெரியாறு, காவிரி நதிநீர் பங்கீடு, கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வருவது, அதிக நிதிப் பகிர்வு கோருதல் என தமிழ்நாட்டின் முக்கியமான பிரச்சினைகளுக்கு அவர் மக்களவையில் குரல் கொடுத்ததில்லை என்பதுதான் யதார்த்தம். இப்படி தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக குரல் கொடுக்காத சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிப்பது தமிழ்நாட்டிற்கு எதிரான செயல்.

**டாக்டர் வா.மைத்ரேயன்,**
**நாடாளுமன்ற மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர்.**



இன்றைய காலகட்டத்தில் தமிழ்நாட்டிற்கு வரும் நிதிப் பகிர்வு வெகுவாக குறைந்திருக்கிறது. கல்வி நிதி மறுக்கப்படுகிறது.தொகுதி மறுவரையில் தமிழ்நாட்டுக்கான மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை குறையப் போவதாக கூறப்படுகிறது. வக்ப் வாரியத்தின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து துன்புறுத்தப்படுகிறார்கள். மும்மொழிக் கொள்கையை திணிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படுவது தாமதப்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டிற்குத் தேவையான பேரிடர் நிவாரண நிதி வழங்கப்படவில்லை. கீழடி ஆய்வை காக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தப் பிரச்சினைகளுக்காக சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் ஏதாவது குரல் கொடுத்தாரா என்றால் நிச்சயம் இல்லை. மாறாக, ஆளும் பாஜக நிலைப்பாட்டை ஆதரித்துப் பேசியவர். இப்படிப்பட்டவருக்கு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிப்பது தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான செயல்.

ஆளுநர் பதவி என்பது அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு பதவி. பொதுவாக ஆளுநராக பொறுப்பேற்றுக் கொண்டு விட்டால் அரசியல் பேசுவதைத் தவிர்ப்பார்கள். ஆனால் இதற்கு முற்றிலும் முரணானவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள். ஆளுநர் பொறுப்பு ஏற்றுக் கொண்ட திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அரசியல் பேசுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார். பாஜக சித்தாந்தத்திற்கு ஆதரவாகப் பேசியவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன். இந்தியக் குடியரசு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுபவர்தான் நாடாளுமன்ற மாநிலங்களவைத் தலைவர் பதவியையும் வகிப்பார் என்ற நிலையில், சித்தாந்த ரீதியாக செயல்படும் சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் நடுநிலையாக செயல்படுவார் என்று நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது. நடுநிலையை கடைபிடிக்காத ஒருவரை இந்தியக் குடியரசு துணைத் தலைவராக தேர்ந்தெடுப்பது ஜனநாயகத்திற்கு எதிரான செயல்.

2024 ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணி சார்பில் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திமுகவிற்கு நூறு விழுக்காடு வெற்றி கிடைத்தது. பாஜகவிற்கு எதிராக தமிழ்நாட்டு மக்கள் ஓரணியில் நின்று திமுக கூட்டணிக்கு வாக்களித்துள்ளனர். இந்த நிலையில் பாஜக சித்தாந்தத்தை பேசும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிப்பது என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான செயல்.

புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தமிழர் என்ற சொல்லுக்கு மிக அழகான விளக்கம் அளித்துள்ளார்.

**எங்கு பிறப்பினும் தமிழர் தமிழரே;**
**இங்கு பிறப்பினும் அன்னியர் அன்னியரே.**

**சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் இங்கு பிறந்தாலும் அவர் அன்னியரே தவிர நம்மவர் அல்ல.**

**அவர் பிறப்பால் தமிழராக இருக்கலாம். ஆனால் உணர்வால் நிச்சயமாக இல்லை.**

### திருவள்ளூர் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்

# பொறியாளர் அணி பொறுப்புக்கான நேர்காணல்!

## மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*திருவள்ளூர் ஆக 22;-*

*திருவள்ளூர் மேற்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் பொறியாளர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளருக்கான நேர்காணல் 24-08-2025 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் திருவள்ளூர் உழவர் சந்தை அருகில் உள்ள நகரக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது இதில் மண்டல மேற்பார்வையாளரும் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளருமான முனைவர் சி.பிரதீப் நேர்காணலை நடத்தி வைக்கிறார்*



*இந் நிகழ்வில் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் சி.சு.விஜயகுமார் மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் சத்யராஜ் , தட்சிணாமூர்த்தி, உத்தமன் செல்வன், சதீஷ் ,தேஜா, பிரவீன், லோகேஷ் , ஆகியோர் இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைக்கிறார்கள்.*

*எனவே திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் தங்கள் பகுதியிலிருந்து ஒன்றிய நகர பேரூர் பொறியாளர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பதவிக்காக விண்ணப்பித்தவர்களை தவறாமல் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்*

*(குறிப்பாக டிப்ளமோ மற்றும் பொறியாளர் சம்பந்தப்பட்ட படித்தவர்களாக இருக்க வேண்டும் என திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தமது அறிக்கை வாயிலாக தெரிவித்துக் கொள்கிறார்.*

### நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை!

# மதுரவாயல் 146-வது வார்டில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தொடங்கி வைக்கிறார்! வட்டச் செயலாளர் எம்.ரூபன் அறிக்கை!

*சென்னை, ஆக.22*

*மதுரவாயல் 146-வது வட்டக் கழக செயலாளர் மதுரவாயல் எம்.ரூபன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி இன்று (22.08.2025 வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு மதுரவாயல் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ சீதாலட்சுமி திருமண மண்டபத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர், வளசரவாக்கம் மண்டல குழு தலைவருமான நொளம்பூர் வே. ராஜன் முன்னிலையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும் மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க. கணபதி முகாமினை துவங்கி வைக்கிறார்.*

*ஆகவே நடைபெற உள்ள இந்த முகாமிற்கு 146-வது வட்டக் கழகத்திற்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி, இளைஞரணி, மாணவரணி உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*





திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் கூவம் ஊராட்சியில் கல்லம்பேடு, கண்ணூர், கூவம், குமாரச்சேரி ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. முகாமில் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் பங்கேற்று பொதுமக்களிடத்திலிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களிடத்தில் எடுத்துரைத்தார். மேலும் முகாமில் பங்கேற்ற பொதுமக்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வட்டாட்சியர் ரஜினிகாந்த், ஒன்றிய கழகச் செயலாளர் மோ. ரமேஷ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி, ஒன்றிய கழக நிர்வாகிகள் உளுந்தை ஆர். கோபால், கண்ணூர் ராஜா, இருளச்சேரி ஏகாம்பரம், ஆறுமுகம், நீலாவதி ராஜேந்திரன், குபேரன், காஞ்சிப்பாடி பி. சரவணன், கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.